தினகரன்

10.12.2017

# கரூர் டிஎன்பிஎல் சார்பில் ரத்ததான முகாம்

## 104 பேர் பங்கேற்பு

க.பரமத்தி, டிச.10: கரூர் டிஎன்பிஎல் காகித நிறுவன சமுதாய கூடத்தில் காகித ஆலை சார்பில் நடந்த ரத்ததான முகாமில் 104பேர் ரத்தம் வழங்கினர்.

டிஎன்பிஎல் காகித நிறுவனம் மற்றும் கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை ரத்த வங்கியும் இணைந்து காகித நிறுவன சமுதாயக்கூடத்தில் ரத்ததான முகாம் நடத்தியது. முகாம் தொடக்க விழாவிற்கு காகித ஆலை துணை பொது மேலாளர் டேவிட் மாணிக்கம் வரவேற்றார்.

பொது மேலாளர் பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். பொது மேலாளர் தங்கராசு ரத்ததான முகாமை தொடங்கி வைத்து பேசினார்.

கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ரத்தவங்கி மருத்துவ அலுவலர் வசந்திபிரபாகரன் முன்னிலை வகித்து பேசினார். ரத்த வங்கி குழுவினர் கொடையாளர்களிடம் ரத்தம் சேகரித்தனர். முகாமில் ஆண்கள், பெண்கள் என மொத்தம் 104நபர்கள் ரத்ததானம் வழங்கினர்.




கரூர் டிஎன்பிஎல் சார்பில் நடந்த ரத்ததான முகாமை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ரத்தவங்கி மருத்துவ அலுவலர் வசந்திபிரபாகரன், பொதுமேலாளர்கள் பாலசுப்பிரமணியன், தங்கராசு ஆகியோர் துவக்கி வைத்தனர்.